**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Deposition of Witness

Mcop 93/2023

**எ. ம.சா.1 ராமலிங்கம்**

Name : ராமலிங்கம்

Father's name :

Village :

Taluk :

Occupation :

Age :

Date :05.03.2026

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கின் 2ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட பேரூந்தின் ஒட்டுனர் என்ற நிலையில் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து ஏற்படுத்திய வாகனத்தை நான் தான் ஒட்டிசென்றேன். என் மீது முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதியறிக்கையும் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். என் மீது பதிவு செய்யப்படட வழக்கை ரத்து செய்வதற்கு காவல்துறை மூலமாகவோ, நீதிமன்றத்தின் மூலமாகவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் செங்கோட்டையில் இருந்து சென்னை நோக்கி பேரூந்தை ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். நான் வடகிழக்கு திசை நோக்கி பேரூந்தை ஒட்டி சென்றேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபர் எனது பேரூந்துக்கு பின்னால் வந்தார் என்றால் சரிதான். அந்த இறந்து போன நபர் குறுக்கே வந்ததாக கூறுவது தவறு என்றால் சரிதான். நான் சுரண்டைக்கு செல்வதற்காக வலது பக்கம் திரும்பி தெற்கு

பக்கமாக சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு வலதுபக்கமாக திரும்ப வேண்டுமெனில் பின்னால் வரும் வாகனத்தை கவனித்து தான் திரும்புவேன் என்றால் சரிதான். முன்னால் செல்லும் வாகனத்தை கடப்பதற்காக வலதுபுறமாக தான் முந்தி செல்ல வேண்டும் என்றால் சரிதான். இறந்துபோன நபர் நான் ஓட்டிய வாகனத்திற்கு வலதுபுறமாக வந்தார் என்றால் சரிதான். இறந்து போன நபர் சரியான திசையில், மிதுவான வேகத்தில் தான் வந்தார் என்றும், நான் தான் எந்தவிதமான சிக்னலும் செய்யாமல் வலதுபுறமாக திரும்பி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு இறந்து போன நபர் தான் காரணம். விபத்து சம்பந்தமான மாதிரிவரைபடம், பார்வைமகசர் ஆகியவற்றை எனது தரப்பிலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது தவறுள்ளதால் தான் என் முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் எதிரூரைக்கு முன்னுக்கு பின்னாக கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன நபர் சாலைவிதிகளை கடைபிடித்து தலைகவசம் அணிந்து வந்தார் என்றும், எனது வாகனம் மோதிய பிறகு தலைகவசம் கழன்று விழுந்துவிட்டது என்றால் சரியல்ல. அவர் தலைகவசம் அணியவில்லை. இறந்துபோன நபரின் வாகனத்தின் காப்பீடு நிறுவனம், உரிமையாளர் ஆகியோர்களை தரப்பினர்களை சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், தேவையான தரப்பினர்களை சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மீது தவறு இருப்பதால் மனுதாரர் தரப்பில் வேறு நபர்களை கட்சி சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என கூறுவது பொய் என்றும், அது விபத்தின் போது தொலைந்து விட்டது என்றால் சரியல்ல. டவுண்டானா நல்ல விஸ்தீரணமான இடம் என்றால் சரிதான். விஸ்தீரணமான இடம் என்பதால் தான் நான் வேகமாக பேரூந்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் நின்று தான் செல்லமுடியும். விபத்தில் இறந்து போன நபரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக கூறுவதும், விபத்திற்கு இறந்துபோன நபரும் காரணம் என

கூறுவது பொய் என்றால் சரியல்ல. இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது. நான் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி சாட்சியம் அளிப்பது ஏற்கதக்கது அல்ல என்றும், எனது சாட்சியம் தவறானது என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் நானும், எங்கள் பேரூந்தின் நிர்வாகமும் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.